[17th July 1962

(*b*) if so, how many of them have been accepted by the Government?

THE HON. SRI P. KAKKAN : A paper [a] is placed on the table of the House.

தீவிர சாகுபடித் திட்டம் (தஞ்சை மாவட்டம்).

* 342 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர்த் தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ், ஒரு எக்கருக்கு ஆகும் உற்பத்திச் செலவு (உழவுக் கூலி, உர, விலை முதலியன அடங்க), எவ்வளவு ? ஒரு எக்கரில் உற்பத்தியாகும் நெல்லின் அளவு யாது ? அதன் மதிப்பு எவ்வளவு ?

(இ) அதே மாவட்டத்தில் சாதாரண முறையில் ஒரு எக்கருக்கு ஆகும் உற்பத்திச் செலவு எவ்வளவு ? உற்பத்தியாகும் நெல்லின் அளவு யாது, அதன் மதிப்பு எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN :

	Cost of cultivation per acre based on enquiries.	Yield (lb.) (1961–62) grain.	Value.	
	(1)	(2)	(3)	
	Rs.		Rs.	nP.
(*a*)	182	2,500	400	00
(*b*)	130	2,160	348	40

புலவர் கா. கோவிந்தன் : இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் பணம் அதிகமாகச் செலவாகியும், உற்பத்தி அந்த அளவுக்கு கணிசமாக இல்லை என்ற நிலை இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலால் தெரிகிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மேலும் அமல் நடத்த வேண்டாம் என்ற கருத்து அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : When any Hon. Minister or any hon. Member from the front benches is speaking and the microphone is on, if hon. Members on both sides in the front benches talk across the table, their speeches are also heard and cause disturbance. Therefore, I request hon. Members not to talk across the table when an hon. Member is speaking.

கனம் திரு. பூ. கக்கன் : தீவிர சாகுபடித் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 343 *Q.*—SRI B. NATARAJAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state what has been the increase in the yield per acre in the working of the Package Deal Scheme in the Thanjavur district?

THE HON. SRI P. KAKKAN : 23·4 per cent is the increase in yield per acre in terms of rice in 1961–62 over 1960–61.

---

[a] Printed as Appendix I on pages 190–192.